திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை திருவள்ளூரில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் , முனைவர் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள் உடன் பேச்சாளர் சைதை சாதிக், கே.திராவிடபக்தன், மாஸ்டர் சேகர், ஆர்.டி.இ.ஆதிசேசன், இ.குருதாஸ், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், சி.சு.ரவிச்சந்திரன், எஸ்.மகாலிங்கம், கூஸூர் எம்.ராஜேந்திரன், மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், தா.மோதிலால், பிரகாஷ்ஞானஒளி, மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்

கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் சென்னையில் நடைபெற்ற திராவிடப் பொங்கல் – பெண்கள் கிரிக்கெட் போட்டியின் துவக்க நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரபல திரைநட்சத்திரம் நிக்கில் கல்ராணி மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஜெ.ரேகாபிரியதர்ஷினி, ஜெ வீரமணி, நிவேதா ஜெசிக்கா, ரத்னா லோகேஸ்வரன், வே.லக்ஷிகர்ரீ, பிரபா ஷாமிலி ஜீவா, ஆர். சுமையா கவுசர், நாஞ்சில் சிபி, கே.ராஜராஜேஸ்வரி, எஸ். ஷபானா, எம்.டி. மோனிஷா, என். துர்காதேவி, மலர் ராஜா, கே. தமிழ்செல்வி மற்றும் பலர் பங்கேற்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி மண்டலம் 2 பகுதியில்

10 கோடியே 70 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் பிப்:03

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட ஆவடி மாநகராட்சி மண்டல 2 பகுதியில் 10, 9, 29, 28, 30, 27, 26, 32, 25, 7, 8,6, வார்டுகளில் உள்ள வள்ளலார் நகர் ஆறாவது தெரு, ராயல் ரெசிடென்சி தெரு, சரஸ்வதி நகர் பத்தாம் தெரு, சரவணன் நகர் பிரதான சாலை ராஜாஜி தெரு, செந்தில் நகரில் கேகே நகர் மூன்றாவது தெருவில், கரிகாலன் சோழன் நகர் திருமுல்லைவாயில் ஸ்ரீ சக்திநகர் , வைஷ்ணவி ஒன்பதாவது தெரு சுதர்சனம் பிரதான சாலை, வெங்கடாசலம் மூன்றாவது பிரதான சாலை ராமன் அசோக் நகர் இரண்டாவது பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் தார் சாலை அமைக்கும் பணிகள் துவக்க விழா

நேற்று நடைபெற்றது

இதற்காக 10 கோடியே 59 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகளை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு நாசர் அடிக்கல் நாட்டில் பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார் இதனை தொடர்ந்து 7 வது வார்டு திருவள்ளுவர் நகரில் ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை கட்டிடத்தை திறந்து வைத்து ரேஷன் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கினர்

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் மாநகராட்சி ஆணையர் சரண்யா மண்டல குழு தலைவர் அமுதா பேபி சேகர் மாநகர கழக பொறுப்பாளர் சன் பிரகாஷ், மாவட்ட கழகத் துணைச் செயலாளர் எஸ். ஜெயபாலன், மாமன்ற உறுப்பினர்கள் கவுன்சிலர்கள் எம்பி. துருவன், மாலா சன் பிரகாஷ், ஜெயப்பிரியா சரவணன், சக்திவேலன், பைரவி ஜான், பி.ஜி.பாண்டியன், விமல், வி.எம் நாகராஜ், எஸ்.செல்வம், கோபால், வெங்கடேசன், பிரபுவேல், சுதாகரன் கிருஷ்ணகுமார் , ராஜேந்திரன், டிசோசா, மற்றும் ஆவடி மாநகராட்சி அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

விமானப் பயணிகளின் பாதுகாப்பு குறித்து

ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன?

மக்களவையில்– டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி

புதுடெல்லி,பிப்.3-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 29 டிசம்பர் 2025 அன்று மக்களவையி;ல், விமானப் பயணிகளின் பாதுகாப்பு குறித்து ஒன்றிய அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும், ஏர் மார்ஷல் ஏ.கே. சேத் குழுவி;ன் பாதுகாப்பு பரிந்துரைகள் ஏன் அமலாக்கப்படவில்லை? என்றும் கண்காணிப்பு ஆணையத்தின் அறிக்கைகள் ஏன் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுவது இல்லை? என்றும், எல்லா அறிக்கைகளுமே விமான ஓட்டிகளை குறை சொல்வது ஏன்? என்றும் கடந்த இருபது ஆண்டுகளின், விமான விபத்துகளிலிருந்து

ஒன்றிய அரசு பாடம் கற்றுக் கொள்ளாதது ஏன்? என்றும் ஒன்றிய அரசின் மாண்புமிகு விமானப் போக்குவரத்துறை இணையமைச்சர் முரளிதர் மகோல் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் விமானப் போக்குவரத்துறை இணைய மைச்சர் அளித்த பதில் பின்வருமாறு :

ஒன்றிய அரசின் விமான விபத்துகள் கண்காணிப்பு ஆணையம் கடந்த 2012ஆம் ஆண்டில், முழு அதிகாரம் பெற்ற அமைப்பாக விமானப் போக்குவரத்து அமைச்சகத்தால் அமைக்கப்பட்டது என்றும், ஏர் மார்ஷல் ஏ.கே.சேத் குழுவின் பரிந்துறைப்படியே இந்த ஆணையம் முழு அதிகாரம் கொண்ட அமைப்பாக உருவாக்கப்பட்டது என்றும், விமான விபத்துக்கள் கண்காணிப்பு விதகளின்படியே, நியாமாகவும், நேர்மையாகவும், முறையான கண்காணிப்புகளை இந்த ஆணையம் மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்றும், இந்த ஆணையத்தின் அறிக்கைகள் அனைத்தும் ஆணையத்தின் இணையத்தளத்தில் முறையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்றும், விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகத்தின் இணைய தளத்தில் கடந்த 2006 ஆண்டு முதலாக தற்போது வரை உள்ள அறிக்கைகள் அனைத்தும் பொதுமக்களுக்கு முறையாக தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும், ஒன்றிய அரசின் மாண்புமிகு விமானப் போக்குவரத்;துறை இணையமைச்சர் திரு. முரளிதர் மகோல் அவர்கள்;, மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

சைதை கிழக்கு பகுதி தி.மு.க. ஆலோசனை கூட்டம்!

பகுதிக் கழக செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி.ஆறிவிப்பு

சென்னை,ஜன.3-

அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தல் படி இன்று 03.02.2026 செவ்வாய்க் கிழமை மாலை சரியாக 6.00 மணிக்கு, 172அ வட்டம் கன்னிகாபுரம், வேளச்சேரி மெயின் ரோடு, பெருநகர சென்னை மாநகராட்சி பல் நோக்கு கட்டிடம் முதல் தளத்தில் வைத்து

பகுதி அவைத்தலைவர் இ.முருகேசன் தலைமையில் துணைமேயர் மு.மகேஷ்குமார் மாவட்ட அவை தலைவர் எஸ். குணசேகரன் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன் பகுதி நிர்வாகிகள் ஆர்.ராஜ்குமார் மு.ஆரோக்கியம் ஆர்.அருணகிரி மு.பாக்கியலட்சுமி முன்னிலையில்

சைதை கிழக்கு பகுதி திமுக ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

நடைபெற உள்ள ஆலோசனைக் கூட்டத்திற்கு நமது சைதை கிழக்கு பகுதியில் உள்ள வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதி அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் குறித்த நேரத்தில் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும் 13வது மண்டலக்குழு தலைவருமான இரா. துரைராஜ் எம்.சி கேட்டுக் கொண்டுள்ளார்.

பொருள்:

1) சைதையில் முதலமைச்சர் மின்னொளி தங்க மங்கையர் கபடிப் போட்டி

2) 11.02.2026 திருவிடந்தையில் நடைபெறும் பி.எல்.ஏ2, பி.டி.ஏ, பி.எல்.சி பங்கேற்கும் கூட்டம்

3) இளைஞர் அணி கிரிக்கெட் போட்டி

4) 21.02.2026 அன்று சைதை தொகுதியில் நடைபெற உள்ள நடைபெற உள்ள தமிழ்நாடு தலைகுனியாது தேர்தல் பரப்புரை பொதுக் கூட்டம் மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு இரா. துரைராஜ் தெரிவித்துள்ளார்.

மீஞ்சூரில் க.சு.தமிழ்உதயன் ஏற்பாட்டில்

துணை முதல்வர் பிறந்தநாள்:

350 பேர் பங்கேற்ற குத்துச்சண்டைப் போட்டி!

எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தொடங்கி வைத்தார்; டி.ஜெ.கோவிந்தராஜன் பரிசு வழங்கினார்!

திருவள்ளூர், பிப். 3-

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் முன்னிட்டு, பொன்னேரி சட்டமன்ற தொகுதி, மீஞ்சூர் பேரூர் திமுக சார்பில், மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ் உதயன் ஏற்பாட்டில், மாநில அளவிலான மாபெரும் குத்துச் சண்டை போட்டிகள் (DEPUTY CM TROPHY) மீஞ்சூர் எழிலில் மண்டபத்தில் ஜனவரி 30 தொடங்கி பிப்ரவரி 1 வரை மூன்று நாட்களுக்கு நடைபெற்றன. இந்த போட்டியில் தமிழ் நாட்டை சேர்ந்த பல் வேறு மாவட்டங்களில் இருந்து 350க்கும் மேற்பட்ட குத்துச்சண்டை வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியின் முதல் நாளான ஜனவரி 30 அன்று, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் குத்துவிளக்கு ஏற்றி போட்டிகளை தொடங்கி வைத்தார். மேலும், இறுதிநாளன்று உதயநிதி ஸ்டாலின் பாக்ஸிங் கிளப் தலைவர் மது சூதனன் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைப் பற்றிய “உலகின் வெளிச்சம்” என்ற பாடிய பாடலை மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு. தமிழ் உதயன் YouTube தளத்தில் வெளியிட, அவர்களிடமிருந்து திமுக செய்தித் தொடர்பு துணை செயலாளர் Dr. S. A. S. ஹபிசுல்லாஹ் பெற்றுக் கொண்டார்.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற குத்துச்சண்டை வீரர்களுக்கு கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி. ஜெ.கோவிந்தராஜன் பரிசு கோப்பைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு கூட்டுச்சண்டை கூட்டமைப்பின் தலைவர் பொன் பாஸ்கர், முன்னாள் செயலாளர் A.K.கருணாகரன், மீஞ்சூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கா.சு.ஜெகதீசன் தலைமை கழக வழக்கறிஞர் A.K.சுரேஷ், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழுத்தலைவர் மீ.வ.கோதண்டம், போட்டி ஒருங்கிணைப்பாளர் திவாரி, கோகுல் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

அறிஞர் அண்ணா நினைவு நாள் : நங்கநல்லூரில் சிலைக்கு மரியாதை!

பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை,பிப்.3-

12வது மண்டல குழு தலைவர், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் என்.சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு நாளை முன்னிட்டு 03.02.2026 செவ்வாய்க் கிழமை இன்று காலை 6:30 மணி அளவில் நங்கநல்லூர் எம்ஜிஆர் ரோடு, ஸ்டேட் பேங்க் காலணியில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளருமான, தா. மோ. அன்பரசன் அவர்கள் ஆலோசனைப்படி, கழக அமைப்பு செயலாளரும், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான, ஆர்.எஸ். பாரதி மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளதால்,

ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், பாகமுகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், மற்றும் கழகத் தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

12வது மண்டல குழு தலைவர், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் என். சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

பகுதிச் செயலாளர் – மண்டலத் தலைவர் தி.மு.தனியரசு அறிக்கை!

சென்னை, பிப்.3-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றி யூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறி வுறுத்தலின் படி திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர், 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று (3.2.2026 -செவ்வாய்க்கிழமை) காலை 6 மணிக்கு சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

அதுபோது சன்னதி தெருவில் இருந்து பெரியார் நகர் வரை அமைதிப் பேரணி புறப்பட்டு பெரியார் நகரில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் படும்.

ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், பொதுக் குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதி கள், வட்ட கழக நிர்வாகி கள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் நடைபெறும் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அமைதிப் பேரணி ஒமந்தூரார் அரசு மருத்துவமனையில் இருந்து கமராஜர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் வரை கலந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு பகுதிக் கழக செயலாளர் தி.மு.தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.

மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயற்குழு கூட்டம் !

பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் அறிவிப்பு!

சென்னை,பிப்.3-

மதுரவாயல் வடக்கு பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி இன்று (02.02.2026) மாலை 5.00 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் (நொளம்பூரில்) பகுதி கழக அவைத் தலைவர் ஆர். கர்ணல் அவர்களின் தலைமையில், பகுதி கழக நிர்வாகிகள் ஆ. மாலினி, தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம. உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் பகுதி கழக ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

அதுபோது கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட இருப்பதால் இந்த கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 170 (அ) வட்டம் தாய் மண்ணே வணக்கம் சிலம்பக் கழகம் சார்பில் 13 வது தேசிய சிலம்ப போட்டி பாண்டிசேரியில் 1.2.2026 அன்று நடைபெற்ற சிலம்ப விளையாட்டு போட்டியில் மாணவர்கள் ஆர்.காவியா, ஆர்.அன்பு செல்வன், வி.ராகவி ஆகியோர் தனித்திறமை – முதல் இடமும், கோப்பையும் பெற்றுள்ளனர். உடன் சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 170 அ வட்ட செயற்குழு உறுப்பினர், தேசிய நடுவர் க. ரகுநாதன் உள்ளார்.

பேரறிஞர் அண்ணா நினைவு நாள்!

ஆலந்தூர் வடக்குப் பகுதி கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

பகுதிச் செயலாளர் ப.குளாணன் வேண்டுகோள்!

சென்னை, பிப்.3-

இன்னாட்டு இங்கர்சால், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு இன்று (03.02.2026 செவ்வாய்க் கிழை) காலை 10.00 மணியளவில் ஆலந்தூர் சட்டமன்ற அலுவலகத்தில் ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ படத்திற்கு காஞ்சி வடக்கு கழகச் மாவட்ட செயலாளரும், சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தவுள்ளதால்,

ஆலந்தூர் வடக்கு பகுதி குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட நிர்வாகிகள், பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள், பாக முகவர்கள் (BLA2) தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மகத்தான முன்னெடுப்பான ‘மீண்டும் மஞ்சப்பை’ திட்டத்தின் ஒரு பகுதியாக, அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது (அ) வட்டத்திற்குட்பட்ட பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாநகராட்சி சார்பில் மாணவச் செல்வங்களுக்கு அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் மஞ்சப்பைகளை வழங்கி நெகிழிப் பைகளின் தீமைகள் குறித்தும், ‘மக்கும் குப்பை’, ‘மக்காத குப்பை’ எனத் தரம் பிரிப்பதன் அவசியம் குறித்தும் மாணவச் செல்வங்களுக்கு விளக்கிக் கூறினார். உடன் பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், 8 வது மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின், மாநில தகவல் தொழிட்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், சுகாதார கல்வி ஆய்வாளர், வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், தலைமை ஆசிரியர் என்.சின்ன வள்ளி தாய், 101 வது (அ) வட்டச் செயலாளர் சி.பி.திருமலை, 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ், வட்டக் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.